

சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று **(26.01.2019)** நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வாரிய அரசு கூடுதல் தலைமைச் செயலர்/ மேலாண்மை இயக்குநர் திரு. அஷோக் டோங்ரே, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள். நிதி இயக்குநர் திரு.கே.முத்துக்குமாரசாமி, பொறியியல் இயக்குநர் திரு.ஆர். சிவசண்முகம், பொது மேலாளர் திரு.த.ராமதுரைமுருகன் உடன் உள்ளனர்.



சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று **(26.01.2019)** நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வாரிய அரசு கூடுதல் தலைமைச் செயலர்/ மேலாண்மை இயக்குநர் திரு. அஷோக் டோங்ரே, இ.ஆ.ப., அவர்கள் குடிநீர் வரி வசூல், சட்டவிரோத மோட்டார் மின் இணைப்பு பொருத்தி குடிநீரை உறிஞ்சும் நுகர்வோர்களின் குடிநீர் இணைப்பை துண்டித்தல், மழைநீர் சேகரிப்பு போன்ற பல்வேறு பணிகளில் சிறப்பாகப் பணியாற்றிய மூன்று பகுதி பொறியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்கள்.

உடன் சென்னைக் குடிநீர் வாரிய நிதி இயக்குநர் திரு. கே.முத்துக்குமாரசாமி, பொறியியல் இயக்குநர் திரு. ஆர்.சிவசண்முகம், பொது மேலாளர் திரு.த.ராமதுரைமுருகன், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர்.




சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று (26.01.2019) நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வாரிய அரசு கூடுதல் தலைமைச் செயலர்/ மேலாண்மை இயக்குநர் திரு. அஷோக் டோங்ரே, இ.ஆ.ப., அவர்கள் அம்ரூத் தொழில் நுட்ப போட்டியில் பங்கேற்று அகில இந்திய அளவில் சென்னை குடிநீர் வாரியத்திற்கு மூன்றாவது பரிசு கிடைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்ட பொறியியல் இயக்குநர் திரு. ஆர்.சிவசண்முகம் தலைமையிலான பொறியியல் குழுவினருக்கு பாராட்டுக் கேடயத்தினையும் குழுவில் இடம்பெற்ற பொறியாளர்கள் ஐவருக்கு தனித்தனியே பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்கள்

சென்னைக் குடிநீர் வாரிய நிதி இயக்குநர் திரு. கே.முத்துக்குமாரசாமி, பொறியியல் இயக்குநர் திரு. ஆர்.சிவசண்முகம், பொது மேலாளர் திரு.த.ராமதுரைமுருகன், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




**செய்தி வெளியீடு எண்.4/2019** **நாள் 26.01.2019**

**சென்னைக் குடிநீர் வாரியத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் அரசு கூடுதல் தலைமை செயலர் / மேலாண்மை இயக்குநர் திரு.அஷோக் டோங்ரே, இ,ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகத்தில் குடியரசு தின விழா இன்று (26.01.2019) சிறப்பாக நடைபெற்றது.

அரசு கூடுதல் தலைமை செயலர் /_மேலாண்மை இயக்குநர் திரு. **அஷோக் டோங்ரே**, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

இவ்விழாவில் வாரியத்தில் 2018 ஆம் ஆண்டில் குடிநீர் வரி வசூல், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு மற்றும் மின் இணைப்பு பொருத்தி சட்டவிரோதமாக குடிநீர் பெற்ற வீடுகளின் இணைப்புகள் துண்டித்தல் போன்ற பல்வேறு பணிகளில் சாதனை புரிந்த பகுதி பொறியாளர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கினார்கள்.

மேலும் அம்ருத் திட்ட தொழில் நுட்ப சவால் போட்டியில் பங்கேற்று அகில இந்திய அளவில் சென்னை குடிநீர் வாரியத்திற்கு மூன்றாவது பரிசு பெற முயற்சிகள் மேற்கொண்ட பொறியியல் இயக்குநர் திரு.ஆர்.சிவசண்முகம் அவர்களின் தலைமையிலான பொறியாளர் குழுவினருக்கு அரசு கூடுதல் தலைமை செயலர்/ மேலாண்மை இயக்குநர் அவர்கள் கேடயம் வழங்கியதோடு குழுவில் இடம்பெற்ற பொறியாளர்கள் ஐவருக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் விருது பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்ட குறைநிவர்த்தி அலுவலர் குழுவினருக்கு பாராட்டு சான்றிதழையும், வரிவசூலில் சிறப்பாக பணியாற்றிய ஓய்வு பெற்ற தாசில்தார் அவர்களுக்கும் பாராட்டு சான்றிதழையும் அரசு கூடுதல் தலைமை செயலர்/ மேலாண்மை இயக்குநர் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் சென்னைக் குடிநீர் வாரிய நிதி இயக்குநர் திரு. கே.முத்துக்குமாரசாமி, பொறியியல் இயக்குநர் திரு. ஆர்.சிவசண்முகம், தலைமைப் பொறியாளர்கள், பொது மேலாளர் திரு.த.ராமதுரைமுருகன், மேற்பார்வைப் பொறியாளர்கள், பகுதிப் பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்